[1992 ஏப்ரல் 27

628—

சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டிடம்.

வினா எண் *8841 திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியகுளம் தாலுகாவில் இயங்கி வரும் சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசுஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

விடை—

பெரியகுளம் தாலுகாவில் இயங்கிவரும் பெரியகுளம் சார் நிலைக் கருவூலம்தற்சமயம் அங்குள்ள வட்டாட்சியர் அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. அதற்கென புதிய கட்டிடம் கட்டுவதற்கான கருத்துரு அரசின் நிதிநிலைக் கேற்ப பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

629—

தஞ்சாவூர் மாவட்டத்தில் மூடப்பட்ட கரும்புப் பண்ணை நிறுவனம்.

வினா எண் *5450 திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மூடப்பட்ட கரும்புப் பண்ணை நிறுவனத்தின் நிலங்களைப் பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) அந்த நிலங்களை விற்ற வகையில் விலை நிர்ணயம் செய்வது பற்றி மறு ஆய்வு மதிப்பீடு செய்யஅரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

விடை—

(அ) மற்றும் (ஆ):

விவர அறிக்கை அவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

தமிழ்நாடு கரும்புப் பண்ணை கழகத்திடமிருந்து எடுக்கப் பட்ட உபரி நிலங்கள் 1965—ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (உபரி நில விநியோக) விதிகளின்படி ஒப்படை

1992 ஏப்ரல் 27]

செய்யப்பட்டதே தவிர, விற்பனை செய்யப்படவில்லை ஒப்படை செய்ததில், முறைகேடுகள் நடந்ததாக தெரியவில்லை. அரசுக்கு வரும் பல்வகை புகார் மனுக்கள் தொடர்பாக, அவ்வப்போது விசாரணை செய்து மனுதாரர்களுக்குப் பதில் தெரிவிக்கப்படுகின்றது.

1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நில விநியோக) விதிகளின் விதி 6 (1) (ஏ)-யின்படி நிலத்தின் நிலமதிப்பு, சட்டத்தின் III ஆம் இணைப்புப் பட்டியலின் 1-ஆம் பகுதியின் 3-ஆம் பத்தியின்படி தீர்மானிக்கப்பட்டவாறு, அந்த நிலங்களின் ஆண்டு மதிப்பில் 12 மடங்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவ்விதியின்படி, 0.75 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு நில மதிப்பு ரூ. 2,700 என்றும், 1.50 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு ரூ. 855 என்றும் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால், இந்நேர்வில், ஒப்படைக்காக ஒப்படைதாரர்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையையும், ஒப்படை நிலங்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, நில மதிப்புத் தொகையைக் குறைத்து, நன்செய் ஏக்கர் 0.75—க்கு ரூ. 2,000 என்றும், புன்செய் 1.50 ஏக்கருக்கு ரூ. 700 என்றும் உபரி நில விநியோக விதிகளின் அடிப்படையில் வசூல் செய்ய உத்தரவிடப்பட்டது. எனவே விலை நிர்ணயம் செய்வது பற்றி மறு ஆய்வு மதிப்பீடு செய்ய வேண்டிய தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

641—

உணவு விநியோகத்தில் பாமோலின் எண்ணெய் கிடைக்க நடவடிக்கை.

வினா எண் *1316 திரு.பே. தர்மலிங்கம்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடந்த இரண்டாண்டு காலமாக உணவு விநியோகத்தில் பாமோலின் எண்ணெய் சரியாக கொடுக்கப்படவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஜி. விஸ்வநாதன்.

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாநிலங்களுக்கு பாமோலின் எண்ணெய் ஒதுக்கீடு செய்வதை மைய அரசு வெகுவாகக் குறைத்து விட்ட நிலையில், அயல் நாடுகளிலிருந்து ரூபாயாக விலையைச் செலுத்தி